முதன்மை அமர்வு நீதிமன்றம், சிவகங்கை

முன்னிலை: **திருமதி.K.அறிவொளி**, **M.A.,M.L.,**

முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை.

2026-ம் வருடம் ஏப்ரல் மாதம் 10-ம் நாள் வெள்ளிக் கிழமை

**சிறப்பு அமர்வு வழக்கு எண்:71/2024** *(CNR No.TNSV01003784/2024)*

மற்றும்

**சிறப்பு அமர்வு வழக்கு எண்:112/2025** *(CNR No.TNSV01003829/2025)*

*****

**சிறப்பு அமர்வு வழக்கு எண்:71 /2024:**

(முதன்மை மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்பத்தூர் முதல்நிலை பதிவேட்டு வழக்கு எண்.05/2023, திருப்பத்தூர் டவுன் காவல்நிலைய குற்ற எண்.102/2023)

**சிறப்பு அமர்வு வழக்கு எண்:112/2025:**

(முதன்மை மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்பத்தூர் முதல்நிலை பதிவேட்டு வழக்கு எண்.42/2025, திருப்பத்தூர் டவுன் காவல்நிலைய குற்ற எண்.102/2023)

தமிழ்நாடு அரசுக்காக காவல் ஆய்வாளர்,
திருப்பத்தூர் டவுன் காவல்நிலைய
குற்ற எண்.102/2023 . . . குற்ற முறையிடுபவர்

/எதிரிடை/

1. கிருஷ்ணகுமார்,
த/பெ.பாண்டி,
இந்திரா காலனி,
ஒக்கூர்,
சிவகங்கை தாலுகா,
சிவகங்கை மாவட்டம்.

2. மதன்ராஜ்,
த/பெ.மலைகள்ளன்,
குருந்தங்குளம்,
செய்களத்தூர் அஞ்சல்,
மானாமதுரை தாலுகா,
சிவகங்கை மாவட்டம். . . . எதிரிகள்

குற்றம் முறையிடுபவர் : தமிழ்நாடு அரசுக்காக காவல் ஆய்வாளர்,

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.10 18:11:05 +0530

திருப்பத்தூர் டவுன் காவல்நிலைய குற்ற எண்.102/2023

| | | |
|---|---|---|
| குற்றம் சாட்டப்பட்டவர்கள் | : | 1. கிருஷ்ணகுமார்,<br>த/பெ.பாண்டி,<br>இந்திரா காலனி,<br>ஒக்கூர்,<br>சிவகங்கை தாலுகா,<br>சிவகங்கை மாவட்டம்.<br><br>2. மதன்ராஜ்,<br>த/பெ.மலைகள்ளன்,<br>குருந்தங்குளம்,<br>செய்களத்தூர் அஞ்சல்,<br>மானாமதுரை தாலுகா,<br>சிவகங்கை மாவட்டம். |
| குற்றம் முறையிடப்பட்டது | : | எதிரிகள் மீது இதச பிரிவு 379 மற்றும் *21(4) of Mines and Minerals (Development and Regulation) Act, 1957*-ன்கீழும். |
| சிறப்பு அமர்வு வழக்கு எண்:71/2024 வழக்கின் எதிரிகள் மீது வனையப்பட்ட குற்றச்சாட்டு. | : | எதிரிகள் மீது *379 IPC*-ன் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது. |
| சிறப்பு அமர்வு வழக்கு எண்:112/2025 வழக்கின் எதிரிகள் மீது வனையப்பட்ட குற்றச்சாட்டு. | : | எதிரிகள் மீது *Section 21(4) of Mines and Minerals (Development and Regulation) Act, 1957*-ன் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது. |
| எதிரிகளின் வாதுரை | : | குற்றவாளிகள் இல்லை. |
| சிறப்பு அமர்வு வழக்கு எண்:71/2024 வழக்கின் தீர்மானம் | : | ***முடிவில்,*** எதிரிகள் இதச பிரிவு *379*-ன் கீழ் குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து கு.வி.மு.ச. பிரிவு 235(1)-ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. |
| சிறப்பு அமர்வு வழக்கு எண்:112/2025 வழக்கின் தீர்மானம் | : | ***முடிவில்,*** எதிரிகள் *21(4) of Mines and Minerals (Development and Regulation) Act, 1957 IPC*-ன் கீழ் குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து கு.வி.மு.ச. பிரிவு 235(1)-ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. |

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.10 18:11:13 +0530

10.04.2026

முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை

முதன்மை மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்பத்தூர் முன்னிலையில் முதல்நிலை பதிவேட்டு வழக்கு எண்.05/2023 மற்றும் முதல்நிலை பதிவேட்டு வழக்கு எண்.42/2025 என்று கோப்பில் எடுக்கப்பட்டு கு.வி.மு.ச 209 பிரிவின் கீழ் மேல் விசாரணைக்கு அனுப்பப்பட்டு இந்நீதிமன்றத்தில் 27.03.2026-ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டும், அரசு தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் திரு.*A*.அழகர்சாமி அவர்கள் முன்னிலையாகியும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.*I*.முனியாண்டி அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், முன்னிலைப்படுத்தப்பட்ட ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும் . . . .

## பொதுவான தீர்ப்புரை-

இவ்வழக்கின் வாதி மற்றும் சாட்சிகளுடன் 18.06.2023-ம் தேதியன்று மதியம் 12 மணிக்கு திருப்பத்தூர் செல்லும் சாலையில் வாகன தணிக்கையில் ஈடுபட்ட போது தம்பிபட்டி ஜங்சன் அருகே *TN 72 CA 7507* என்ற பதிவெண் கொண்ட டிப்பர் லாரியின் உரிமையாளரான 1-வது எதிரி, 2-வது எதிரியுடன் சேர்ந்து சுமார் 3 யூனிட் அளவிலான ரூ.7410/- மதிப்புள்ள *M-Sand*-ஐ கனிமத்திற்கான நடைச்சீட்டு ஏதும் இல்லாமல் லாப நோக்கம் கருதி அதிக விலைக்கு விற்பதற்காக திருட்டுத்தனமாக ஏற்றி வந்துள்ளார்கள் என்றும், எனவே எதிரிகள் *21*(4) of Mines and Minerals (Development and Regulation) Act, 1957 r/w 379 IPC-ன் கீழ் தண்டிக்கத்தக்கவர்கள் என்று திருப்பத்தூர் டவுன் காவல்நிலைய காவல் ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2)** எதிரிகள், கற்றறிந்த முதன்மை மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்பத்தூர் அவர்கள் முன்பாக முன்னிலையான போது, எதிரிகளுக்கு வழக்கு ஆவணங்களின் நகல்கள் கு.வி.மு.ச. பிரிவு 207-ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டும், எதிரிகள் மீதான குற்றம் சிவகங்கை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரிக்கப்படத்தக்கது என்பதால் கு.வி.மு.ச. பிரிவு 209-ன் கீழ் வழக்குக் கோப்பு இந்நீதிமன்றத்தில் விசாரணைக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**3)** எதிரிகள் இந்நீதிமன்றத்தில் முன்னிலையானபோது சிறப்பு அமர்வு வழக்கு எண்:71/2024 வழக்கில் உள்ள எதிரிகள் மீது சுமத்தப்பட்ட 379 IPC-ன் கீழும் மற்றும் சிறப்பு அமர்வு வழக்கு எண்:112/2025 வழக்கில் உள்ள எதிரிகள் மீது சுமத்தப்பட்ட 21(4) of Mines and Minerals (Development and Regulation) Act, 1957 IPC-ன் கீழும் குற்றங்களை புரிந்திருக்கக்கூடும் என்று அனுமானிக்கத்தக்க காரணம் இருக்கின்றது என்று முடிவு செய்து, கடந்த 05.11.2025 அன்று எதிரிகள் மீது 21(4) of Mines and Minerals (Development and Regulation) Act, 1957 r/w 379 IPC-ன் கீழான குற்றங்களைப் பற்றி எழுத்து மூலமான குற்றச்சாட்டுக்கள் வனைந்து கு.வி.மு.ச.பிரிவு 228(1)(ஆ)-ன் கீழ் எதிரிகளிடம் குற்றச்சாட்டுக்களை தமிழில் படித்துக்காட்டி விளக்கிக் கூறியபோது எதிரிகள் 21(4) of Mines and Minerals (Development and Regulation) Act, 1957 r/w 379 IPC-ன் கீழான குற்றங்களை மறுத்துரைத்து, தாங்கள் குற்றவாளிகள் இல்லை என்று கூறி விசாரணை கோரினார்கள். எனவே, இந்நீதிமன்றத்தால் கு.வி.மு.ச. பிரிவு 231-ன் கீழ் அரசுத் தரப்பு சாட்சியங்களை விசாரணை செய்ய உத்தரவிடப்பட்டது.

**4)** கனிமவள வழக்குகளில் தனிநபர் புகார் பதிவு செய்யப்பட்டு அதனடிப்படையில் ஒரு வழக்கும், குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.10 18:11:29 +0530

அதனடிப்படையில் ஒரு வழக்குமாக கோப்பிற்கு எடுக்கப்பட்டிருக்கும் நிலையில் மேற்படி இரு வழக்குகளையும் ஒருசேர நடத்த வேண்டுமென்று மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் கீழக்கண்ட வழக்கில் தெளிவாக எடுத்துரைத்துள்ளது.

2023(4) CTC 113 : 2023(3) LW 601 : 2023(2) LW (Crl)1: 2023(3) MLJ (Crl) 536 - S.Kumar Vs The District Collector, Kokkirakulam and others – It is held that B. Mines and Mineral (Development and Regulation) Act, 1057 Sections 22 and 23A Compounding of Offence – Jurisdiction of Police – FIR registered for offences under IPC as also MMRD Act – Police have no jurisdiction to compound offences under IPC – Prosecution under IPC and prosecution under MMDR Act are wholly isolated and District and not connected with each other – Compounding of offence under MMDR Act cannot have any hearing on prosecution initiated under IPC – Police personnel has jurisdiction to compound offences under MMDR Act.

**5)** அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகளும், அவர்கள் மூலமாக அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்களும், அ.சா.பொ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**6) அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சியங்களின் சுருக்கம் பின்வருமாறு:-**

*i)* அ.சா.1 ஜெகதீசன் தனது சாட்சியத்தில்,கடந்த 2023-ம் ஆண்டு மண்டல புவியியல் மற்றும் சுரங்கத்துறை உதவி புவியியலாளராக பணியாற்றிய போது தாங்கள் தங்கள் துறையின் மண்டல இணை இயக்குநர், சென்னை இயக்குநர் அலுவலகத்தின் உத்தரவின் பேரில் அவரும் சிவகங்கை மாவட்ட புவியியல் துறை சார்ந்த ஜெகதீசன் என்பவரும் திருப்பத்தூர் செல்லும் சாலையில் தம்பிபட்டி அருகே

சென்ற போது தங்களுக்கு எதிரே புதுக்கோட்டை திருப்பத்தூர் சாலையில் *TN 72 CA 7507* என்ற பதிவெண் கொண்ட டிப்பர் வாகனத்தில் சுமார் 3 யூனிட் அளவுள்ள *M-sand* ஏற்றிய வாகனம் வந்ததை நிறுத்தி சோதனை செய்த போது வாகனத்தை ஓட்டி வந்த ஓட்டுநரிடம் கேட்ட போது அவரிடம் கனிமத்திற்கான உரிய நடைச்சீட்டு இல்லாமல் மேற்படி வாகனத்தை உரிய அனுமதியின்றி *M-sand* ஏற்றி அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படுத்தி வந்ததாக ஓட்டுநர் மதன்ராஜ் என்பவர் மீதும் வாகனத்தின் உரிமையாளர் கிருஷ்ணகுமார் என்பவர் மீதும் தான் ஒரு எழுத்து மூலமான புகாரை திருப்பத்தூர் நகர் காவல் நிலையம் சென்று வண்டியை மணலுடன் ஒப்படைத்து புகார் கொடுத்ததாகவும், மேற்படி புகார் அ.சா.ஆ.1 என்றும், மேற்குறிப்பிட்ட *TN 72 CA 7507* என்ற பதிவெண் கொண்ட டிப்பர் வாகனத்தை 3 யூனிட் *M-Sand* மணலுடன் கைப்பற்றி மகஜர் அத்தாட்சியிலும் தான் கையொப்பமிட்டதாகவும், மேற்படி கைப்பற்றுதல் மகஜர், அத்தாட்சியில் உள்ள கையொப்பம் அ.சா.ஆ.2 என்றும், புகைப்படத்திலுள்ள *TN 72 CA 7507* என்ற பதிவெண் கொண்ட டிப்பர் லாரி சா.பொ.1 என்றும் சாட்சியமளித்துள்ளார்.

*ii)* அ.சா.2 செல்வபிரபு தனது சாட்சியத்தில், கடந்த 2023-ம் ஆண்டு திருப்பத்தூர் நகர் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்த போது கடந்த 18.06.2023-ம் தேதி சுமார் மதியம் 01.00 மணியளவில் தான் நிலையத்தில் இருந்த போது கனிம புவியியல் துறையிலிருந்து தாங்கள் ஒரு வண்டியை பிடித்துள்ளோம் என்று இவ்வழக்கின் புகார்தாரர் ஜெகதீசன் கொடுத்த புகாரை பெற்று நிலைய குற்ற எண்.102/2023-ன் படி இதச பிரிவு 379 மற்றும் 21(1) *MMDR Act* முதல் தகவல் அறிக்கை தயார் செய்ததாகவும், மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 என்றும், மேற்படி புகாரை உரிய நீதிமன்றத்திற்கு அனுப்பி

KANNAYEERAM ARIVOLI Digitally signed by KANNAYEERAM ARIVOLI Date: 2026.04.10 18:11:45 +0530

வைத்து, அதன் நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வழக்கு கோப்பை காவல் ஆய்வாளரின் பார்வைக்கு வைத்ததாக சாட்சியமளித்துள்ளார்.

*iii)* அ.சா.3 கலைவாணி தனது சாட்சியத்தில், கடந்த 18.06.2023-ம் தேதி திருப்பத்தூர் நகர் காவல் ஆய்வாளராக பணியில் இருந்த போது அன்று பகல் 11.00 மணியளவில் நிலையத்தில் சார்பு ஆய்வாளர் பொறுப்பில் இருந்த செல்வபிரபு என்பவர் நிலைய குற்ற எண்.102/2023 இதச பிரிவு 379 மற்றும் 21(1) *MMDR Act-* படி பதிவு செய்து வைத்திருந்த முதல் தகவல் அறிக்கை மற்றும் வழக்கு கோப்பை பெற்று விசாரணைக்கு எடுத்துக் கொண்டு, இவ்வழக்கில் சார்பு ஆய்வாளர் *TN 72 CA 7507* என்ற பதிவெண் கொண்ட டிப்பர் வாகனத்தில் சுமார் 3 யூனிட் அளவுள்ள *M-sand* மணலுடன் கூடிய வாகனத்தை ஒப்படைத்ததை பெற்று அன்று 14.00 மணியளவில் உரிய அத்தாட்சி தயார் செய்து, மேற்குறிப்பிட்ட சொத்தை படிவம் 91-ன் மூலம் உரிய நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாகவும், மேற்படி படிவம்-91 அ.சா.ஆ.4 என்றும், இவ்வழக்கில் புலன் விசாரணை மேற்கொண்டு கனிம நிறுவன உதவி பொறியாளரிடம் பெற்ற *M-sand* மணலின் மதிப்பு சான்று அ.சா.ஆ.5 என்றும், மேலும் இவ்வழக்கில் கைப்பற்றிய சுமார் 3 யூனிட் *M-sand* மணலை திருப்பத்தூர் வட்டாச்சியர் அலுவலகத்தில் ஒப்படைத்ததாகவும், திருப்பத்தூர் வட்டாச்சியரால் வழங்கப்பட்ட ஒப்புகை ரசீது அ.சா.ஆ.6 என்றும், 18.06.2023-ம் தேதி வழக்கின் குற்றவாளி மதன்ராஜ் என்பவரை திருப்பத்தூர் காவல் நிலையம் அருகில் வைத்து கைது செய்து உரிய நீதிமன்ற காவல் நிலையத்திற்கு அனுப்பி வைத்ததாகவும், மற்றொரு எதிரி கிருஷ்ணகுமார் 22.06.2023-ல் உரிய நீதிமன்றத்தில் சரணடைந்து முன் பிணை பெற்றுள்ளார் என்பதை தெரிந்து கொண்டதாகவும், மேலும் சாட்சிகள் கனிம வளத்துறை உதவியாளர் ஜெகதீசன் மற்றும் வழக்கு சம்பவத்தின்

போது இருந்த ஜெகதீஸ், சாட்சிகள் சரவணன் மற்றும் மணல் மதிப்பீடு செய்த ஆனந்த மரியவளவன், சார்பு ஆய்வாளர் செல்வபிரபு ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், விசாரணை முடித்து கடந்த 19.07.2023-ம் தேதி இதச பிரிவு 379 மற்றும் 21(1) *MMDR Act*-படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும், மேலும் இவ்வழக்கில் குவிமுச பிரிவு 200-படியான தனி நபர் புகாரை கடந்த 11.08.2025-ல் முதன்மை மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், திருப்பத்தூரில் தாக்கல் செய்ததாகவும், மேற்படி குவிமுச பிரிவு 200 படியான தனி நபர் புகார் அ.சா.ஆ.7 என்றும் சாட்சியமளித்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் முடிக்கப்பட்டது.

**7)** அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்து எதிரிகளுக்குப் பாதகமாக இருக்கக்கூடிய பகுதிகள் பற்றி எதிரிகளிடம் கு.வி.மு.ச. பிரிவு 313 (1) (ஆ)-ன் கீழ் தமிழில் விளக்கிக் கூறி வினவிய போது, எதிரிகள் அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் தங்களுக்குப் பாதகமாக தோன்றக் கூடிய பகுதிகளைப் பொய் என மறுத்துள்ளார்கள். மேலும், தங்கள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறப்பட்டதை தொடர்ந்து, எதிரிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

**8)** தற்போது இந்நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால் சிறப்பு அமர்வு வழக்கு எண்.71/2024-ல் உள்ள எதிரிகளுக்கு எதிரான 379 IPC-ன் கீழான குற்றச்சாட்டு மற்றும் சிறப்பு அமர்வு வழக்கு எண்.112/2025-ல் உள்ள எதிரிகளுக்கு எதிரான 21(4) of Mines and Minerals (Development and Regulation) Act, 1957-ன் கீழான குற்றச்சாட்டு அரசு

தரப்பால் தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதேயாகும்.

**பிரச்சனைக்குரிய தீர்வு:-**

**9)** இவ்வழக்கின் வாதி மற்றும் சாட்சிகளுடன் 18.06.2023-ம் தேதியன்று மதியம் 12 மணிக்கு திருப்பத்தூர் செல்லும் சாலையில் வாகன தணிக்கையில் ஈடுபட்ட போது தம்பிபட்டி ஜங்சன் அருகே *TN 72 CA 7507* என்ற பதிவெண் கொண்ட டிப்பர் லாரியின் உரிமையாளரான 1-வது எதிரி, 2-வது எதிரியுடன் சேர்ந்து சுமார் 3 யூனிட் அளவிலான ரூ.7410/- மதிப்புள்ள *M-Sand*-ஐ கனிமத்திற்கான நடைச்சீட்டு ஏதும் இல்லாமல் லாப நோக்கம் கருதி அதிக விலைக்கு விற்பதற்காக திருட்டுத்தனமாக ஏற்றி வந்துள்ளார்கள் என்பதாக எதிரிகள் மீது *21*(4) of Mines and Minerals (Development and Regulation) Act, 1957 r/w 379 IPC-ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டுள்ளது.

**10)** எதிரிகள் மீது வனையப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை நிரூபணம் செய்யும் வகையில் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான ஆவணங்களும் அ.சா.பொ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளன. இவ்வழக்கில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளில் அ.சா.1 ஜெகதீசன் புகார்தாரர் புகார் மனு கொடுத்தது பற்றி கூறும் சாட்சி, அ.சா.2 செல்வபிரபு, சார்பு ஆய்வாளர் அ.சா.1 கொடுத்த புகாரைப் பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து புலன் விசாரணைக்கு வேண்டி காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்த விபரம் பற்றி கூறும் சாட்சி, அ.சா.3 கலைவாணி இவ்வழக்கை புலன்விசாரணைக்கு எடுத்துக் கொண்டு சாட்சிகளை விசாரணை, எதிரிகள் கைது பற்றியும் மற்றும் வழக்கின் விசாரணை முடித்து

எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த காவல் ஆய்வாளர் ஆவார்.

11) அரசு தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் அவர்கள் இவ்வழக்கில் எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்களை நிரூபணம் செய்யும் வகையில் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்களும் மற்றும் அ.சா.பொ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், இவ்வழக்கில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகள் அனைவரும் கடந்த 18.06.2023-ம் தேதியன்று மதியம் 12 மணிக்கு திருப்பத்தூர் செல்லும் சாலையில் வாகன தணிக்கையில் ஈடுபட்ட போது தம்பிபட்டி ஜங்சன் அருகே *TN 72 CA 7507* என்ற பதிவெண் கொண்ட டிப்பர் லாரியின் உரிமையாளரான 1-வது எதிரி, 2-வது எதிரியுடன் சேர்ந்து சுமார் 3 யூனிட் அளவிலான ரூ.7410/- மதிப்புள்ள *M-Sand*-ஐ கனிமத்திற்கான நடைச்சீட்டு ஏதும் இல்லாமல் லாப நோக்கம் கருதி அதிக விலைக்கு விற்பதற்காக திருட்டுத்தனமாக ஏற்றி வந்துள்ளார்கள் என்பது நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே எதிரிகளுக்கு தக்க தண்டனை வழங்க வேண்டுமென்று வாதிட்டார்.

12) எதிரிகள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் அவர்கள் இவ்வழக்கு சம்பவம் குறித்து தனிநபர்கள் யாரும் புகார் கொடுக்கவில்லை என்றும், எதிரிகளால் *TN 72 CA 7507* என்ற பதிவெண் கொண்ட லாரில் ஏற்றிக்கொண்டு வந்த *M-Sand* எந்த இடத்திலிருந்து அள்ளப்பட்டது, சம்பவ இடத்தின் நீள, அகலம் மற்றும் சேதமதிப்பு பற்றி புகாரில் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றும், அ.சா.1-ஆன சம்பவ சாட்சி எதிரிகளால் மேற்படி லாரியில் அள்ளிக் கொண்டு வந்த *M-Sand*-ன் மதிப்பு என்ன என்பது பற்றி

ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், மேலும் இவ்வழக்கை பொறுத்து தனிப்பட்ட சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை என்றும், இவ்வழக்கு சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்ட சான்று பொருட்களான மண் வெட்டி மற்றும் சாந்துசட்டி கைப்பற்றப்படவில்லை என்றும், எனவே எதிரிகளுக்கும், இவ்வழக்கு சம்பவத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றும், புள்ளிவிபர கணக்கிற்காக மட்டுமே எதிரிகள் மீது இவ்வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், அரசு அனுமதியில்லாமல் எதிரிகள் *M-Sand*-ஐ லாரியில் அள்ளிக் கொண்டு வந்தார்கள் என்பது பற்றியும் அரசு தரப்பில் தகுந்த சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபணம் செய்யப்படவில்லை என்றும், எனவே எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் தகுந்த சாட்சிகளின் சாட்சியங்கள் மூலம் நிரூபணம் செய்யப்படவில்லை என்றும், எனவே இவ்வழக்கில் எழுந்துள்ள சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி எதிரிகளை இவ்வழக்கு குற்றச்சாட்டுகளிலிருந்து விடுதலை செய்ய வேண்டியது அவசியம் என்று வாதிட்டார்.

**13)** இவ்வழக்கில் எதிரிகள் தரப்பில் அ.சா.1-ஐ குறுக்கு விசாரணை செய்யும் போது அவர் தனது குறுக்கு விசாரணையில் தனக்கு தனிப்பட்ட நபர் யார் மூலமாகவோ புகார் வரவில்லை என்றும், இயக்குநரகத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு நகல் எதையும் தான் தனியாக போலிசார் விசாரணையில் சமர்ப்பிக்கவில்லை என்றும், தான் வழக்கு சம்பவத்தின் போது திருச்சி மண்டலத்தில் பணியாற்றி வந்ததாகவும், தங்களுக்கு சிவகங்கை மாவட்ட பகுதியில் கண்காணிக்க உத்தரவு வந்ததாகவும், மேற்படி உத்தரவின் நகலையும் போலிசாரிடம் தனியாக சமர்ப்பிக்கவில்லை என்றும், சிவகங்கை மாவட்ட கனிம வளத்துறை சார்பில்

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.10 18:12:26 +0530

தனியாக புகார் எதுவும் தங்களுக்கு கொடுக்கப்படவில்லை என்றும், *M-Sand*-ல் சில வகைகள் உண்டு என்றும், *M-Sand* என்பது கல் உடைத்த பின் தூசியாக வரும் என்றும், சம்பவ நடந்த பகுதியில் அரசு அனுமதி பெற்ற கல் உடைக்கும் குவாரிகள், *(Crusher)* நிறுவனம் எவ்வளவு உண்டு என்று விசாரித்து தெரிந்து கொள்ளவில்லை என்றும், நடைச்சீட்டு என்பதற்கும், மணலை விற்பதற்கான உரிமம் என்பதற்கும் வேறுபாடு உண்டு என்றும், *M-Sand* எங்கிருந்து எடுத்து வரப்பட்டது என்பதை தன்னால் சொல்ல முடியுமா என்றால், அது குறித்து தனியாக தாங்கள் விசாரிக்கவில்லை என்றும், தாங்கள் மேற்குறிப்பிட்ட வண்டியை பிடித்த காலத்தில் *M-Sand* விற்பதற்கு அரசால் தடை இல்லை என்றும், இவ்வழக்கில் வண்டியின் உரிமையாளர் ஒரு பொறியாளர் என்பது பற்றி தனக்கு தெரியாது என்றும், தான் கொடுத்த புகாரில் வாசகங்கள் எழுதி முடிக்கப்பட்ட பகுதிக்கும், இப்படிக்கு என கையெழுத்திட்ட பகுதிக்கும் இடையே சிறிது இடைவெளி உள்ளது என்றும், அ.சா.ஆ.2 கைப்பற்றுதல் மகஜரில் தங்களது அலுவலக முத்திரை இல்லை என்றும், அ.சா.ஆ.2 கைப்பற்றுதல் மகஜரில் எதிரிகளின் கையெழுத்து பெறப்படவில்லை என்றும், தான் கொடுத்த புகாரில் அறிவேன் சாட்சியாக யாரும் கையெழுத்து போட்டார்களா என்றால் ஞாபகமில்லை என்றும், தாங்கள் வாகனத்தை கைப்பற்றிய இடத்திற்கும், திருப்பத்தூர் காவல் நிலையத்திற்கும் எவ்வளவு தூரம் இடைவெளி இருக்கும் என்று குறிப்பாக சொல்ல முடியவில்லை என்றும், வாகனத்தை தான் தனியாக புகைப்படம் எதுவும் எடுக்கவில்லை என்றும் ஒப்புக்கொண்டு சாட்சியமளித்துள்ளார். அதேபோல் அ.சா.2 தனது குறுக்கு விசாரணையில் புகார் பெறப்படுவதற்கு முன்பாக சம்பவ இடத்திற்கு சென்று சம்மந்தப்பட்ட வாகனத்தை பார்க்கவில்லை என்றும், அ.சா.1 ஜெகதீசன் கொடுத்த

புகார் ஏற்கனவே எழுதிக் கொண்டு வரப்பட்ட புகார் என்றும், மேற்படி புகாரை புகார்தாரர் தான் எழுதினார், நேரடியாக தனக்கு தெரியுமா என்றால் தனக்கு தெரியாது என்றும், தான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையில் காலம் 16ல் தகவல் கொடுத்தவரின் கையொப்பம் என்ற இடத்தில் கையொப்பம் பெறவில்லை என்றும், அ.சா.ஆ.1 புகாரில் 2வது பக்கத்தில் புகார் பெறப்பட்டது என்ற தனது குறிப்பில் குற்ற எண்.102/2023 என்பதில் 20 என்பது திருத்தியும் அதேபோல் பிரிவு 21 (1) என்பதில் 1 என்ற எழுத்து அடைப்பு குறிப்பில் திருத்தி எழுதப்பட்டுள்ளது என்றும் ஒப்புக்கொண்டு சாட்சியமளித்துள்ளார்.

**14)** மேலும் அ.சா.3 காவல் ஆய்வாளர் தனது குறுக்கு விசாரணையில் வழக்கு சம்பவம் குறித்து தனி நபர் யாரும் புகார் கொடுக்கவில்லை என்றும், தான் சம்பவ இடத்திற்கு நேரில் சென்று தனியாக ஆவணங்கள் எதுவும் தயாரிக்கவில்லை என்றும், கைப்பற்றிய வாகனத்தை காவல் நிலையத்திற்கு யார் ஓட்டி வந்தார் என்ற விவரம் தெரியாது என்றும், *M-sand* என்பது ஜல்லிகல்லை உடைத்து அதன் தூசி மூலம் கிடைக்கும் ஒரு வகை கனிமம் என்று சொன்னால் சரிதான் என்றும், பொதுவாக *M-sand* மணல் வீட்டு உபயோகங்களுக்கு பயன்படுத்துவது உண்டு என்றால் சரிதான் என்றும், இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட *M-sand*-ஆனது எந்த கல் உடைக்கும் நிறுவனத்திடமிருந்து பெறப்பட்டது என்பது குறித்து விசாரணை மேற்கொள்ளவில்லை என்றும், இந்த வழக்கில் குற்ற இறுதி அறிக்கை தான் தான் தாக்கல் செய்தேன் என்றும், முதல் தகவல் அறிக்கையில் சட்ட பிரிவு இதச பிரிவு 379 மற்றும் 21(1) *MMDR Act* என்று குறிப்பிட்டுள்ள நிலையில் இறுதி அறிக்கையில் சட்ட பிரிவு இதச பிரிவு 379 மற்றும் 21(4) *MMDR Act* என்று தாக்கல் செய்துள்ளேன் என்றும், வழக்கின் தன்மைக்கேற்ப வழக்கின் பிரிவை மாற்றியதற்கு

தனியாக அறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றும், நீர் வளத்துறையிலிருந்து பெறப்பட்ட அ.சா.ஆ.5-ல் *M-sand* என குறிப்பிடாது மணல் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் ஒப்புக்கொண்டு சாட்சியமளித்துள்ளார்.

**15)** மேலும் இவ்வழக்கில் அ.சா.1-ஆன புகார்தாரர், சாட்சி-2, 3 ஆகியோருடன் கடந்த 18.06.2023-ம் தேதியன்று மதியம் 12 மணிக்கு திருப்பத்தூர் செல்லும் சாலையில் வாகன தணிக்கையில் ஈடுபட்ட போது தம்பிபட்டி ஜங்சன் அருகே *TN 72 CA 7507* என்ற பதிவெண் கொண்ட டிப்பர் லாரியின் உரிமையாளரான 1-வது எதிரி, 2-வது எதிரியுடன் சேர்ந்து சுமார் 3 யூனிட் அளவிலான ரூ.7410/- மதிப்புள்ள *M-Sand*-ஐ கனிமத்திற்கான நடைச்சீட்டு ஏதும் இல்லாமல் லாப நோக்கம் கருதி அதிக விலைக்கு விற்பதற்காக திருட்டுத்தனமாக ஏற்றி வந்தார்கள் என்பதற்கும், மேற்படி எதிரிகளால் *TN 72 CA 7507* என்ற பதிவெண் கொண்ட லாரியில் ஏற்றிக் கொண்டு வரப்பட்ட 3 யூனிட் *M-Sand* எந்தப் பகுதிகளில் அள்ளப்பட்டது என்ற விவரம் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்பதற்கும் அரசு தரப்பில் யாதொரு ஆவணமும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

**15)** இந்நிலையில், இவ்வழக்கில் சொல்லப்பட்டுள்ளதுபோல் அரசு அனுமதியில்லாமல் எதிரிகள் 3 யூனிட் *M-Sand*-ஐ *TN 72 CA 7507* என்ற பதிவெண் கொண்ட லாரியில் அள்ளி வந்தார்கள் என்பது குறித்து சந்தேகம் எழுகிறது. குறிப்பாக இவ்வழக்கில் தனிப்பட்ட சாட்சிகள் யாரும் சாட்சியாக விசாரிக்கப் படவில்லை என்பதையும் அறிய முடிகிறது. இந்நிலையில், இவ்வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றும், புள்ளி விபர கணக்கிற்காக

எதிரிகள் மீது பொய்யாக இவ்வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்று கூறும் எதிரிகள் தரப்பு கூற்று எளிதில் நிராகரிப்பதற்கில்லை.

**16)** எனவே, மேலே விவாதிக்கப்பட்டுள்ள காரணங்களின் அடிப்படையில் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் வாய்மொழி சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை ஒருங்கிணைந்து சீர்துாக்கி பார்க்கும்போது எதிரிகள் மீது வனையப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தகுந்த சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமில்லாமல் நிரூபணம் செய்யப்படவில்லை என்று தீர்மானித்து அதனடிப்படையில் இவ்வழக்கில் எழுந்துள்ள சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி எதிரிகளை விடுதலை செய்ய வேண்டியது அவசியம் என்பதாகவே இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

**சிறப்பு அமர்வு வழக்கு எண்:71/2024:**

***முடிவில்,*** எதிரிகள் இதச பிரிவு 379-ன் கீழ் குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து கு.வி.மு.ச. பிரிவு 235(1)-ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

**சிறப்பு அமர்வு வழக்கு எண்:112/2025:**

***முடிவில்,*** எதிரிகள் பிரிவு 21(4) of Mines and Minerals (Development and Regulation) Act, 1957-ன் கீழ் குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து கு.வி.மு.ச. பிரிவு 235(1)-ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

இவ்வழக்கில் பி.ஆர்.எண்.24/2025-ல் அ.சா.பொ.1-ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள *TN 72 CA 7507* என்ற பதிவெண் கொண்ட டிப்பர் லாரி இந்நீதிமன்ற குற்றவியல் பல்வகை மனு எண்.3088/2023-ல் பிறப்பித்த உத்தரவுப்படி அதன் உரிமையாளர் உரிய ஆவணங்களின் பேரில் இடைக்காலப் பொறுப்பில்

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.10 18:13:00 +0530

பெற்றுச் சென்று விட்டதால், மேல்முறையீட்டு காலத்திற்குப் பிறகோ, மேல்முறையீடு இருப்பின் அதன் முடிவிற்குப் பின்னரோ மேற்படி வாகனத்தை அதன் உரிமையாளரிடம் நிரந்தரமாக ஒப்படைக்க வேண்டுமென்றும், இவ்வழக்கு குற்றச்சாட்டு குறித்து வைப்புத் தொகை ஏதேனும் செலுத்தியிருந்தால் உரிய நீதிமன்றத்தில் மனு செய்து திரும்ப பெற்றுக் கொள்ளவும், எதிரிகள் எழுதிக் கொடுத்த பிணை முறிகள் ரத்து செய்யப்பட வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது.

இந்தத் தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரில் சொல்லப்பட்டு, பின்பு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, அதன்பின்பு என்னால் பிழை திருத்தப்பட்டு இன்று 2026-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 10-ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.10 18:13:08 +0530

முதன்மை அமர்வு நீதிபதி,
சிவகங்கை.

**அரசு தரப்பு சாட்சிகள்:-**
**திருவாளர்கள்.**

| அரசு தரப்பு சாட்சிகளின் வரிசை. | சாட்சிகளின் பெயர் | சாட்சிகளின் பற்றிய விபரம் |
|---|---|---|
| அ.சா.1 | ஜெகதீசன்,<br>உதவி புவியியலாளர். | சாட்சி 2, 3 உடன் ரோந்து சென்றது பற்றியும், புகார் கொடுத்தது பற்றியும் கூறும் சாட்சி. |
| அ.சா.2 | செல்வபிரபு,<br>சார்பு ஆய்வாளர். | சாட்சி 1 கொடுத்த புகார் மனுவை பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, வழக்கை புலன்விசாரணைக்கு காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்த விபரம் பற்றி கூறும் சாட்சி. |
| அ.சா.3 | கலைவாணி,<br>காவல் ஆய்வாளர். | இவ்வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சாட்சிகள் விசாரணை, எதிரிகள் கைது பற்றியும் மற்றும் விசாரணை முடித்து எதிரிகள் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தது பற்றி கூறும் சாட்சி. |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:-**

| **சான்றாவணங்களின் வரிசை.** | **சான்றாவணங்களின் விபரம்.** | **சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டவர்களின் விபரம்.** |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | புகார். | அ.சா.1 |
| அ.சா.ஆ.2 | கைப்பற்றுதல் ஆஜர். | அ.சா.1 |
| அ.சா.ஆ.3 | முதல் தகவல் அறிக்கை. | அ.சா.2 |
| அ.சா.ஆ.4 | படிவம்-91. | அ.சா.3 |
| அ.சா.ஆ.5 | மணலின் மதிப்பு சான்று. | அ.சா.3 |
| அ.சா.ஆ.6 | திருப்பத்தூர் வட்டாட்சியர் வழங்கிய ஒப்புகை ரசீது. | அ.சா.3 |
| அ.சா.ஆ.7 | தனிநபர் புகார் (200 Cr.P.C.). | அ.சா.3 |

**அரசு தரப்பு சான்று பொருள்:-**

| சான்று பொருட்களின் வரிசை | சான்று பொருட்களின் விபரம். | சான்று பொருட்கள் குறியீடு செய்யப்பட்டவர்களின் விபரம். |
|---|---|---|
| அ.சா.பொ.1 | *TN 72 CA 7507* என்ற பதிவெண் கொண்ட டிப்பர் லாரி. | அ.சா.1 |

**எதிரிகள் தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள்**:- இல்லை.

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.10 18:13:26 +0530

முதன்மை அமர்வு நீதிபதி,
சிவகங்கை.

முதன்மை அமர்வு நீதிமன்றம்,
சிவகங்கை
சிறப்பு அமர்வு வழக்கு
எண்கள்.71/2024
மற்றும்
112/2025
பொதுவான வரைவு - சீரான /
தீர்ப்புரை
நாள்: 10.04.2026

10.04.2026 முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை